# அகம் 5 புறம் 5
## புதுமைப் பயணம்

கருத்தாக்கம் மற்றும் தொகுப்பு
சோம.நாகலிங்கம் **IRS.,**
தலைமைப் பயிற்சியாளர்

1/759, நக்கீரர் தெரு, பாரத் நகர், திருப்பாலை, மதுரை – 14

9003659270**(M) email** nikhilfoundation.eyte@gmail.com

NIKHIL FOUNDATION
(Empowering Youth Towards Excellence)

அகம் 5 புறம் 5 அறிமுக உரை

மாணவர்களை வல்லமைப் படுத்தும் முயற்சியில் ஓர் புதுமைப் பயணம். இதுகாறும் 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களை வல்லமைப்படுத்திக் கொண்டிருக்கும் ஃபவுன்டேஷன் 6,7 மற்றும் 8ஆம் வகுப்பு மாணவர்களை வல்லமைப்படுத்த ஒரு புதிய வாழ்க்கைக் கல்வித் திட்டத்தை அகம் 5 மற்றும் புறம் 5 என்ற நிகழ்ச்சியின் மூலம் அறிமுகப்படுத்துகின்றது.

ஏற்கனவே இருப்பது போல இதுவும் ஒருநாள் நிகழ்ச்சியா? பள்ளிகளில் ஒரு நாள் அனுமதிப்பதே பெரிய விஷயமாக இருக்கும் பொழுது தொடர்ச்சியாக மாணவர்களைச் சந்திக்கும் வாய்ப்போ, எடுத்துக் கொண்ட பயிற்சியில் சொல்லப்பட்ட விஷயங்களை சற்றே அசைபோட மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பளித்து சொல்லக்கூடிய பண்புநலன்களை ஒரே நாளில் திணிக்காமல் மாதத்திற்கொரு முறையோ அல்லது வாரத்திற்கொருமுறையோ தொடர்ச்சியான ஒரு பயிற்சியை அளிப்பது என்பது ஒரு கனவுத் திட்டமே. அது நனவாவதில் நடைமுறைச் சிக்கல்கள் பல இருக்கின்றன. ஆகையால் இந்த பயிற்சியையும் வழக்கம் போல் ஒருநாள் நிகழ்ச்சியாக வடிவமைப்பது காலத்தின் கட்டாயமாகவும் அதுவே யதார்த்தமான அணுகுமுறையாகவும் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஏன் அகம் 5 புறம் 5? பண்புநலன்கள் காணாமல் போய்க்கொண்டிருக்கும் காலம் இது என்றால் மிகையாகாது. பாடத் திட்டங்களும் அவைகளுக்கான கல்வியை உள்ளடக்கியதாக இல்லை. ஆகவே ஒரு மனிதனுக்குத் தேவையான பண்பு நலன்களில் அவனை சமூகத்தில் தற் சார்புடையவனாகவும் அதே நேரத்தில் தன் சக மனிதனைச் சார்ந்தவனாகவும் ஆக்குவதில் இந்தப் பயிற்சி முக்கியப் பங்காற்றும் என்பதில் அதீத நம்பிக்கை இந்த ஃபவுன்டேஷனுக்கிருக்கின்றது. புறம் 5 அவன் கைக்கொள்ளவேண்ணடிய லாவகங்கள் பற்றியும், அகம் 5 அவனுக்கான முக்கியமான பண்பு நலன்களைப் பற்றியும் ஒரு விழிப்புணர்வை அவனுக்களித்து அதற்கான லாவகங்களையும் பயிற்சி கொடுத்து அவனை வல்லமைப்படுத்தும் என்பது சத்தியம்.

அகம் 5 ல் முதலில் வருவது அன்பு. இதைப்பற்றிய வள்ளுவனின் வாக்கோ,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு.

என்று தனக்கென வாழாது மற்றவர்க்காக வாழும் பாங்கினை மற்றும் அதன் முக்கியத்துவத்தை அன்பின் மூலம் நமக்கெடுத்துரைக்கின்றார். இரண்டாவதாக வருவது பொறுப்புணர்வு. என்றோ நடந்த லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் ராஜினாமா இன்றளவும் பொறுப்புணர்ந்து செயல்படுவதற்கு ஓர் உரைகல்லாக, உதாரணமாகப் பேசப்படுகிறதென்றால் இந்தப் பண்பு நலன் அரிதினும் அரிதாகிவிட்டது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மூன்றாவதாக வருவது ஒற்றுமை. என்னதான் வேற்றுமையில் ஒற்றுமை காணும் பாரதம் எனப் பெருமை பேசினாலும் இந்திய நண்டுகள் கதையும் ஊர்கூடிப் பால் ஊற்றும் உதாரணமும் ஒற்றுமையின் தேவையை நம் இளையோர் முன் வைத்திடல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. நான்காவதாக வருவது நேர்மை. பொதுவாழ்வில் அரிதினும் அரிதாகிவிட்ட ஒரு பண்புநலன் என்றால் மிகையாகாது. நமது பக்கத்திலிருக்கும் சிங்கப்பூர் ஹாங்காங் எல்லாம் முதல் பத்து இடங்களில் இருக்க 78ஆம் இடம் என்ற இழிநிலை நமது பாரதத்திற்கு என்பது நிதர்சனம். ஐந்தாவதாக வருவது மற்றவர் நிலையில் நம்மை வைத்துப் பார்ப்பது. ஒருவரையொருவர் சார்ந்து வாழ நல்லதோர் புரிதல் வேண்டும். அந்தப் புரிதலுக்கு அடிப்படை தான் இந்த பண்பு நலன்.

புறம் 5ல் முதலில் வருவது ஆக்கபூர்வ செயல்பாடு அல்லது மாற்றுச் சிந்தனை அல்லது படைப்பாற்றல் திறன். படைப்பாற்றலின் உச்சத்தினால் தான் உலகம் வையக்கிராமம் ஆனது. பல கனவுகள் நனவானதற்கான லாவகம் இந்த படைப்பாற்றல் தான். இரண்டாவதாக வருவது கவனித்தல். பேசவும், எழுதவும் சொல்லும் பள்ளிச்சாலைகள் கவனிக்கும் திறனை மேம்படுத்த எந்த ஒரு செயலையும் செய்வதில்லை. கற்றலின் கேட்டலே நன்று என்ற போதினும் நமது கவனிக்கும் திறன் சிறப்புடனில்லை. மூன்றாவதாக வருவது பாராட்டும் செய்கைகள். ஒவ்வொரு மனிதனுமே அங்கீகாரத்திற்கு ஏங்கும் காலம் இது. அதைக்கண்டறிந்து பாராட்டக் கற்றுக் கொண்டால் உறவுகள் மேம்படும். நான்காவதாக வருவது ஆழ்ந்து சிந்தித்தல். முல்லா நஸ்ருதீனின் கதைகள் நம்மை ஆழ்ந்து சிந்திக்க உதவுகின்றன. ஒரு மனிதன் ஆழ்ந்து சிந்திப்பதன் மூலம் தான் தன்னை அறிகிறான். தன்னை அறிந்தால் தனக்கோர் கேடுமில்லை என திருமூலரும் கூறுகிறார். வள்ளுவனோ,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு. (355)

என்று ஆழ்ந்த சிந்தனையை நமக்கு வலியுறுத்துகின்றான். ஐந்தாவதாக வருவது உணர்வுகள் மேலாண்மை. உணர்வு வழி செல்லாது சற்றே பொறுத்து செயல்படுதல் உணர்வு மேலாண்மையை மேம்படுத்துவது மட்டுமல்லாது எடுத்த காரியத்தில் வெற்றியையும் தேடித் தரும். ஆக அகம் 5 புறம் 5ன் மூலம் மாணவ சமுதாயத்தை வல்லமைப்படுத்தி அவர்களை நல்லதோர் குடிமக்களாக்கி இப்பாரத கண்டத்தை அமைதிப் பூங்காவாக ஆக்குவதில் நிகில் ஃபவுன்டேஷன் முக்கியப் பங்காற்ற விரும்புகின்றது. அதன் முதல் அடியே இந்தத் தொகுப்பு.

ஆரோக்கியமான மாணவப் பருவம் மற்றும் வளர் இளம்பருவ வளர்ச்சிக்கான முயற்சி தான் இந்த வாழ்வியல் திறன் பயிற்சி.

**அன்பு**

**குழு செயல்பாடு**

**மாணவர்களை பின் வரும் பெயர்கள் வைத்துச் சிறு குழுக்களாகப் பிரிக்கவும்**

**வாழ்க**

**வளர்க**

**வெல்க**

**உயர்க**

**ஓங்குக**

**ஒளிர்க**

**மிளிர்க**

மாணவர்களை அவர்கள் தங்களை அழைக்க விரும்பும் செல்லப் பெயர் கொண்டு அறிமுகப்படுத்தச் செய்யவும். அன்பென்றவுடன் அவர்கள் மனதில் தோன்றும் நபரையும் அறிமுகப்படுத்தச் சொல்லவும். பின் குழுவிற்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கச் செய்து குழுவில் இருக்கும் மற்ற அங்கத்தினர்களை அவர்களைக் கொண்டு அறிமுகப் படுத்தச் சொல்லவும்.

முதலில் அகம் 5 ன் முதல் பண்பு நலனான அன்பைப் பற்றித் தெரிந்து கொள்வோம். மாணவர்களை பின்வரும் கதையினைப் படித்து அவர்களின் கருத்துக்களைத் தெரிவிக்கச் சொல்லவும். குழுவின் தலைப்பையே அதன் முழக்கமாகவும் மற்றும் அன்று முழுவதும் சந்திக்கும் நபர்களை அன்புடன் முகமன் கூறுவதற்கும் பயன்படுத்த வேண்டும். மேலும் அந்த முகமனை அல்லது வாழ்த்தொலியைப் பெறும் நபர் எப்படி நடந்து கொள்கின்றார் என்பதை வகுப்பில் சீரிய இடைவெளிகளில் பகிர்ந்து கொள்ள அனுமதிக்க வேண்டும்